10.7.2019.
அசல் வழக்கு எண் 288-2009

வா.சா.1 பெரியாழ்வார் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி
பிரதிவாதி தரப்பு குறுக்கு் விசாரணை

நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் விவசாயம் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் 30 வருடமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். வழக்கு சம்பந்தப்பட்ட விபரத்தை நான் தான் என் வழக்கறிஞரிடம் சொன்னேன் தாவா சொத்தை நான் நேரடியாக கிரையம் பெற்றேன். தாவா சொத்தை கிரையம் பெற்றபோது காளிசெட்டியார் பெயரில் பட்டா தாக்கலாகியிருந்தது. காளிசெட்டியரிடமிருந்து ஜமரு பீவி என்பவரிடம் இருந்து 5.7.1975ம் தேதி கிரையம் பெற்றார். ஜமரு பீவியிடம் இருந்து வனஜா கிரையம் பெற்றார் வருடம் எனக்கு நினைவில்லை. வனஜாவிடமிருந்து நல்லதம்பி கிரையம் பெற்றார் கிரைய தேதி நினைவில்லை நல்லதம்பியிடருந்து நான் 17.6.2008ம் தேதி கிரையம் பெற்றேன் நல்ல தம்பியிடம் அவர் பெயருக்கு பட்டா மாறாதது சம்பந்தமாக நான் கேட்டேனா ென்றால் இல்லை. தாவா சொத்தின் நான்குமாலில் உள்ள நபர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு 8ம் நம்பர் பிளாட்டு உள்ளது. 8ம் நம்பர் பிளாட்டு சம்பநதமாக இந்நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு நினவைில்லை. தாவா சொத்தை கடைசியாக போனமாதம் சென்று பார்த்தேன். தாவா சொத்தை சுற்றி கல் ஏதேனும் ஊன்றி உள்ளேனா என்றால் இல்லை பிரதிவாதி சுற்றி காம்பவுண்டு சுவர் எடுத்துள்ளார். அதனால் தாவா இடத்தை என்னால் பார்க்க இயலவில்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி காம்பவுண்டு சுவர் எடுத்துவிட்டார். முகமது பீவி , அசோக் இருவரும் சேர்ந்து காம்பவுண்டு சுவர் எடுத்து விட்டார்கள். காம்பவுண்டு சுவர் சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன்.

புகார் கொடுத்த பிறகு இருவரையும் அழைத்து விசாரித்தார்கள். காம்பவுண்டு சுவர் எடுத்தது சம்பந்தமாக நீதிமன்றத்தில் பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் கோரப்பட்டுள்ளது. எனது பிராதில் காளிசெட்டியார் பல நபர்களுக்கு மனைகளாக பிரித்து கிரையம் செய்ததில் சொத்து விபரத்தில் மொத்த விஸ்தீரணத்தை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காளிசெட்டியார் 9 நபர்களுக்கு கிரையம் செய்துள்ளார் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது நான் 8, 9 பிளாட்டுகளை கிரையம் பெற்றுள்ளேன். 9ம் நம்பர் பிளாட்டு கிரையம் பெற்று 2, 3 வருடம் கழித்து 8ம் நம்பர் பிளாட்டை கிரையம் பெற்றேன். பிளாட் நம்பர் 6,7,8,9 ஆகியவற்றில் மேற்கு பக்தி ச.எண் 203-1பி மற்ற பகுதிகள் ச.எண்.202-1எ. யிலும் இருப்பது போல் தோற்றம் அளிக்கிறது என்றால் சரிதான். பிளாட்டு எண் 9ல் மேற்குபகுதி ச.எண்.203-1பி யில் எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பிளாட் எண் 8. ச.எண்.202-1எ மற்றும் 203-1 பி யில் சேர்ந்துள்ளது. பிரதிவாதி தரப்பு எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்துள்ளேன். தாவா சொத்தை கிரையம் பெற்ற பிறகு பட்டா மாறுதல் கோரி நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் மேற்கொண்டேன். வழக்கு நீதிமனறத்தில் இருப்பதால் பட்டா மாறுதல் செய்து கொடுக்கவில்லை அது சம்பந்தமான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி காம்பவுண்டு சுவர் எடுத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தடை, இடஞ்சல் செய்தது சம்பந்தமாக என் முன் பாத்தியஸ்தர் நல்லதம்பியிடம் கேட்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை 9.3.2009ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி கிரைய ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து ச.எண்.203-1பி யில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தான 42 செண்டு நிலத்தை காளிசெட்டியாரிடமிருந்து அய்யாசாமி கிரையம்

பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி அய்யாசாமியிடமிருந்து சுப்புலெட்சுமி என்பவர் 31 செண்டு நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மீத முள்ள சொத்தை 1988ம் ஆண்டு அய்யாசாமியிடமிருந்து பாண்டி என்பவர் கிரையம் பெற்றுளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பாண்டியிடமிருந்து 1988ம் ஆண்டு சந்திரா என்பவர் 10 செண்டு நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 10 செண்டை பொறுத்து சந்திரா என்பவர் 6.6.2005ம் தேதி சுப்புலெட்சுமி என்பவருக்கு பவர் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி மொத்த சொத்தான 42 செண்டையும் சுப்புலெட்சுமியிடமிருந்து 27.1.2006ம் தேதி 2ம் பிரதிவாதி அசோக் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 9.3.2009ம் தேதி அசோக்கிடமிருந்து 1ம் பிரதிவாதி தகுந்த பிரதிபலனுக்கு கிரையம் பெற்றுளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது முதல் தாவா சொத்தினை சுற்றி காம்பவுண்டு சுவர் வைத்து பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருவதால் சொத்தில் வில்லங்கம் இருப்பது தெரிந்து சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமலும் கிரைய ஆவணத்தை பொறுத்து ரத்து செய்ய பரிகாரம் கோராமலும் நிர்ந்தர உறுத்துகட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபுவத்தில் எப்போதும் இருந்தது இல்லை ஏ்னறால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத் தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை